**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.22/2010**

2025=ம் ஆண்டு நவம்பர் மாதம் 24ம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W.3 பாண்டிமாதேவி வயது 31 க/பெ பிரபு**

**நேரம் - 12.00**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி( பிரதிவாதிகள் 1 மற்றும் 2 தரப்பு)**

எங்கள் கூட்டு குடும்பத்தில் எத்தனை நபர்கள் உள்ளார்கள் என்றால் 30 நபர்கள் உள்ளனர். நாங்கள் அனைவரும் சேர்ந்து கூட்டாக ஏதேனும் தொழில் செய்து வருகிறோமா என்றால் இல்லை. முனுசாமி தாவா சொத்தை தவிர்த்து இதர சொத்துக்கள் வேறு ஏதேனும் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி இதர சொத்துக்கள் இன்னும் பாகம் செய்யாமல் இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி பாகம் செய்யாமல் இருக்கும் இதர சொத்துக்கள் நாங்கள் அனைவரும் கூட்டு குடும்பமாக அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான், ஆனால் தனித் தனியாக பயிர் வைத்து அனுபவித்து வருகிறோம். மேற்படி தனி தனியாக பயிர் வைத்து வாய் மொழியாக பிரித்து அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான்.

2. நாங்கள் கூட்டு குடும்பமாக இருந்து வருகிறோம் என்றால் ஏன் தனித் தனியாக பயிர் வைத்து வருகிறோம் ஒன்றாகவே பயிர் வைத்து வரலாம் என்றால் கூட்டு குடும்பங்கள் தனித் தனியாக உள்ளதால் தனித் தனியாக பயிர் வைத்து வருகிறோம். வழக்கு சொத்து எவ்வளவு அளவு என்றால் 25 செண்டாகும். முனுசாமி கவுண்டர் 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு 1963 ம் வருடம் கிரையம் கொடுத்த சொத்து மொத்தமாக 25 செண்ட் என்றால் சரிதான். எங்கள் தாத்தா முனுசாமி கவுண்டர் எழுதி கொடுத்துள்ளதாக சொல்கிறார்கள், ஆனால் நாங்கள்தான் அனுபவித்து வருகிறோம் மற்றும் எங்கள் தாத்தா முனுசாமி கவுண்டர் பெயரில்தான் இன்றளவும் வருவாய் ஆவணங்கள் இருந்து வருகிறது.

3. நான் தெள்ளூர் கிராமத்தில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். தெள்ளூர் மற்றும் ராந்தம் கிராமத்தில் ஏற்கனவே இருந்த கூட்டுறவு சங்கங்களின் பெயர்கள் எனக்கு தெரியுமா என்றால் ராந்தத்தில் மட்டும்தான் கூட்டுறவு சங்கம் இருந்தது. தெள்ளூர் கிராமத்தில் கூட்டுறவு சங்கம் இல்லை, வேறு ஏதேனும் சங்கங்கள் உள்ளதா என்றால் அதுப் பற்றி எனக்கு தெரியாது. ராந்தம் கிராமத்தில் உள்ள கூட்டுறவு சங்கத்தின் மீதுதான் நாங்கள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான்.

4. முனுசாமி கவுண்டர் சரியான பிரதிபலனுக்காகதான் 1963ம் ஆண்டு மேற்படி 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளுக்கு 25 செண்ட் கிரையம் கொடுத்தார் என்றாலும், அதை நான் மறைத்து தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆகையால், இவ்வழக்கில் உள்ள 1ம் வாதி கோட்டீஸ்வரன் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.22/2010 ஐ தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும், பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.1/2011ன் படி தீர்ப்பாணை ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

நேரம் - 12.15

**<u>குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் 8 மற்றும் 9 தரப்பு)</u>**

நேரம் -12.25

இவ்வழக்கை தாக்கல் செய்துள்ள நபர்களை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் எனக்கு என்ன உறவுமுறை என்றால் 1ம் வாதியான கோட்டீஸ்வரன் எனக்கு அப்பா வழி சின்ன தாத்தா ஆவார். சொசைட்டிக்கு எந்த வருடம் தாவா சொத்தை எழுதி கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், 1963ம் ஆண்டு எழுதி கொடுத்தார்கள். அந்த வருடம் நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். என் தாத்தா முனுசாமி கவுண்டரை நான் பார்த்துள்ளேனா என்றால் சிறு வயதில் நான் பார்த்ததாக நினைவில் உள்ளது.

2. ஆகையால் 1963ம் ஆண்டு கிரையம் பெற்ற ஆவணம் உண்மையானதா அல்லது செல்லாதா என்ற விவரம் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான், ஆனால் மேற்படி ஆவணம் செல்லாது என்பது உண்மைதான். முனுசாமி கவுண்டரின் இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்றுகள் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் சாட்சி தாக்கல் செய்திருப்பார்கள் என்று கூறுகிறார். அசல் வழக்கு எண்.1/2011 வழக்கில் அரசு தரப்பினரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் அதுப் பற்றி எனக்கு தெரியாது.

3. ஏற்கனவே என் தாத்தா முனுசாமி கவுண்டர் கிரையம் கொடுத்த சொத்திற்கு எதிராக நான் தற்போது சாட்சியம் அளிக்க முடியாது என்றால் நான் அந்த குடும்பத்தை சேர்ந்த வாரிசுதான். மேற்படி கிரைய பத்திரத்தில் நான் விற்றவரோ அல்லது வாங்கியவரோ அல்லது சாட்சி

கையொப்பம் இடாததால் மேற்படி பத்திரம் செல்லாது என என்னால் சாட்சியம் அளிக்க முடியாது என்றால் முனுசாமி மற்றும் கோட்டீஸ்வரன் இறந்ததால் நாங்கள்தான் வாரிசுதாரர்கள் ஆவோம்.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

நேரம் - 12.35.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi,
District Munsif,
District Munsif Court, Arni